<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>
<u>O.S.No.85/2020</u>

2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் படி திரு.புஷ்பராஜ் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்தி | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | செல்வராஜ் | கிராமம் | : | |
| வயது | : | | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**<u>வா.சா.1 முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

1. கடந்த 02.06.1980 தேதியிட்ட என் கணவர் செல்வராஜிற்கு மகேந்திரவர்மன் சார்பாக அவரது தாயார் காமாட்சி அம்மாள் எழுதி கொடுத்தி கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அந்த **கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** கடந்த 07.01.2020 தேதியிட்ட என் கணவர் செல்வராஜ் எனக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அந்த **செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. என் பெயரிலும், பிரதிவாதியின் தந்தை ஏகாம்பரம் பெயரிலும், மகேந்திரன் பெயரிலும் கடந்த 07.02.2020 அன்று காஞ்சிபுரம் மண்டல துணை வட்டாட்சியர் அளித்த மனைவரி தோராய பட்டா தாக்கல் செய்கிறேன். அந்த **மனைவரி தோராய பட்டா வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. என் கணவர் பெயரில் உள்ள 1997 முதல் 1998 வரைக்கான சொத்து வரி ரசீது தாக்கல் செய்கிறேன். அந்த **சொத்து வரி ரசீது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. கடந்த 13.03.2018 தேதியிட்ட என் கணவர் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது தாக்கல் செய்கிறேன்.அந்த **சொத்து வரி ரசீது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. தாவா சொத்தில் என் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை தாக்கல் செய்கிறேன். அந்த மின் கட்டண அட்டை **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. தாவா மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன். அந்த **மாதிரி வரைபடம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. கடந்த 01.02.1975 முதல் 02.01.2020 வரைக்கான தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் (கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது) தாக்கல் செய்கிறேன். அந்த **சொத்தின் வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.R.Rajeswari)
Principal District Munsif,
Kancheepuram.